**கவனிக்க.-** *11.10.2024 ஆந் திகதிய 2406 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2407 - 2024 ඔක්තෝබර් මස 18 වැනි සිකුරාදා - 2024.10.18**

*2407 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 434 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

433 - B 82619- 353 (2024/10)

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72270.
மத்திய மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: CPC/LC/LD/4/1/31/46

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், வில்கமுவ பிரதேச செயலக பிரிவின் நு 395 நு – நாகொல்ல கிராம அலுவலர் பிரிவின் நாகொல்ல கிராமத்தின் வில்/பி.செ/2016/11/29 ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நிலவரைபடத்தின் 02 றூட், 10.14 பேர்ச் அளவுடைய அரச காணித்துண்டானது தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:**

வடக்கு : அரச காணி;
கிழக்கு : திரு. ராஜசிங்க பண்டா என்பவரால் பயன்படுத்தப் படுகின்ற அரச காணி மற்றும் திரு. திசாநாயக்க என்பவரால் பயன்படுத்தப்படுகின்ற காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : கற்களை கொண்ட அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்.-** 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக காணப்படுமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபா அல்லது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்.-** தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) இக்காணி சேவை நீர்த்தேக்க செயற்றிட்டம் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தப்படக்கூடாது;

(ஈ) இக்குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதியினுள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் ஆகியோரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதியினுள் குத்தகைதாரரினால் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

(ஒ) குத்தகைப் பணம் தொடர்ந்து செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் செலுத்தப்படவேண்டியுள்ள நிலுவைப் பணத்தின் 10% தொகை தண்டப் பணமாக அறவிடப்படும்.

கே. ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 02.

10 - 129

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75275.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/6/BT/L/74.

**21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மொணராகலை மாவட்டத்தின் புத்தலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 143/A/3 ரஹதன்கம கிராம அலுவலர் பிரிவின் வன்தம கிராமத்தில் அமைந்துள்ள குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட BU/LND/B/RLTAP/128 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் 17.7355 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை விவசாய நோக்கத்திற்காக திருமதி வெடென கொண்ட ஆரச்சிகே அனுஷா விமுக்திக்கா பெர்னாந்து என்பவர் குத்தகைக்குக் கோரியுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:**

வடக்கு : வீதியின் பாதுகாக்கப்பட்ட பகுதி;
கிழக்கு : F. T. P. 71 இன் 2056 காணித் துண்டு;
தெற்கு : F. T. P. 71 இன் 2056 காணித் துண்டு;
மேற்கு : அருவியின் பாதுகாக்கப்பட்ட பகுதி.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 - 2054.08.06 வரை)

**வருடாந்த குத்தகைத் தொகை**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை**.- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை பெறுபவர்களால் குத்தகை ஆரம்பித்து 01 வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகை பெறுபவர்களால் இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்படிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

தந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணி செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 04.

10 - 135

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/76042.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/6/BT/L/73.

**21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மொணராகலை மாவட்டத்தின் புத்தலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 143/A/3 ரஹதன்கம கிராம அலுவலர் பிரிவின் வன்தம கிராமத்தில் அமைந்துள்ள குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட BU/LND/13/RLTAP/93 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் ஏக்கர்: 45, ரூட் 01, பர்ச்சஸ் 12.78 பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை விவசாய நோக்கத்திற்காக ஹேரத் முதியன்சேலாகே துசித்த விமலனாத் பண்டார விஜேசூரிய என்பவர் குத்தகைக்குக் கோரியுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது**:

வடக்கு : F. T. P. 71 இன் 2056 காணித் துண்டு;
கிழக்கு : F. T. P. 71 இன் 2056 காணித் துண்டு;
தெற்கு : அருவியின் பாதுகாக்கப்பட்ட பகுதி;
மேற்கு : F. T. P. 71 இன் 2056 மற்றும் பிரவேச வழி.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.08.07 - 2054.08.06 வரை)

**வருடாந்த குத்தகைத் தொகை**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை**.- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை பெறுபவர்களால் குத்தகை ஆரம்பித்து 01 வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகை பெறுபவர்களால் இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங் களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகை தாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2024.08.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 04.

10 - 136

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/76448.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L-10/plan/2022/2/.மா. செ.

**21 (2) இலக்கத்தினை வகிக்கின்ற அரசங்க காணி ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

அநுராதபுர மாவட்டத்தின் பலாகல பிரதேச செயலக பிரிவிற்கு உரித்தான இலக்கம் 674, பல்பெதியாவ கிராம அலுவலர் பிரிவின் பல்பெதியாவ கிராமத்தின் இ. கி. வ 1071 இன் (இறுதி கிராம வரைபடத்தின்) ஒரு பகுதியினை காட்டுவதற்கு காணி உத்தியோகத்தரினால் வரையப்பட்ட மாதிரி முதற்சுவட்டின் துண்டிலக்கம் 01 இனால் காட்டப்பட்டுள்ள ஏக்கர் 02 விஸ்தீரணத்தினைக் கொண்ட அரசாங்க காணியின் பகுதியினை விவசாய நடவடிக்கைகளுக்காக ஹேரத் முதியன்சேலாகே பியதாச சரத்சந்திர அவர்களின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என்பதினை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:**

வடக்கு : அரசாங்க காணி;
கிழக்கு : அரசாங்க காணி;
தெற்கு : அரசாங்க காணி;
மேற்கு : 893/1071 காணி.

02. கோருகின்ற இக் காணியானது வேண்டப்பட்ட விடயத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். ஆகவே அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியினை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதுகின்றது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2024.07.15- 2054.07.14)

**வருடாந்த குத்தகைத் தொகை**.- 2024 ஆம் வருடத்தில் காணியினை மதிப்பீடுச் செய்யப்பட்ட பெறுமதியானது ரூபாய் ஐந்து மில்லியனிற்கும் (ரூபா 5,000,000.00) குறையும் சந்தர்ப்பத்தின் போது பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அவ் வருடத்தின் காணியின் முன்னேற்றமமற்ற பெறுமதி 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியினை மதிப்பீடுச் செய்யப்பட்ட பெறுமதியானது ரூபாய் ஐந்து மில்லியன் அல்லது ரூபாய் ஐந்து மில்லியனை (ரூபா 5,000,000.00) விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தின் போது பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அவ் வருடத்தின் காணியின் முன்னேற்றமமற்ற பெறுமதி 4% ஆகும். இக் குத்தகை தொகையானது ஐந்து வருடத்திற்கு ஒவ்வொரு தடவையும் மீள் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதோடு ஐந்து வருடத்திற்கு முன் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகையாளரினால் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருடத்தினுள் பிரதேச செயலாளர் விரும்பும் விதத்தில் குறிப்பிடப்பட்ட காணியானது அபிவிருத்தச் செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகையாளரினால் குறிப்பிடப்பட்ட காணியானது விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்து வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்ட விசேட வேறு நிபந்தனைகளுக்கும் இவ் குத்தகையானது உட்படுதல் வேண்டும்;

(உ) காணியினை குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்பட்ட கால வரையறையில் காணியினைப் பெற்றுக் கொண்ட விடயத்தினை/ நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு தவறும் பட்சத்தில் குத்தகை வழங்குனரினால் குத்தகையினை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்;

(ஊ) 2022.07.15 ஆந்திகதி முதல் 5 வருடத்திற்கு மேற்படுவதற்கு முன் உப குத்தகை ஒப்பந்தம் செய்ய முடியாது;

(எ) குத்தகைக்கான வாடகையினை தவறாது செலுத்துதல் வேண்டும் என்பதோடு, அதனைத் தவறும் பட்சத்தில் உடன்படிக்கையானது தானாகவே இரத்துச் செய்யப்படும்;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 06 கிழமைகளுக்குள் உரிய காணியினை குத்தகைக்கு வழங்கக் கூடாது என்பதற்கு ஏற்புடைய காரணங்களை குறிப்பிட்டு எனக்கு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் கோரிக்கையின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித கல்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 05.

10 - 137

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73483.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: HDS/01/37/06/40.

**21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 158, பட்டஅத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவின் பட்டஅத்த தெற்கு கிராமத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் வரையப்பட்ட 0152 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் துண்டு இல.: A மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நோக்கத்திற்காக டெக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் தனியார் கம்பனியின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதாக என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது**:

வடக்கு : F. L. P. இன் துண்டு இலக்கம் 1352;
கிழக்கு : F. L. P. இன் துண்டு இலக்கம் 1352;
தெற்கு : F. L. P. இன் துண்டு இலக்கம் 1352;
மேற்கு : F. L. P. இன் துண்டு இலக்கம் 1366.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.07.28 ஆம் திகதி முதல் முன்னோக்கி)

**வருடாந்த குத்தகைத் தொகை**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2021 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை**.- தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை பெறுபவர்களால் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட 01 வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெறுபவர்கள் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2021.07.28 ஆந் திகதி முதல் ஐந்து வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை அடைந்துகொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்கள் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் என்பவற்றுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ராஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 03.

10 - 149

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/60847.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: SPLC/GAL/03/03/57.

**அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

காலி மாவட்டம், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 97 ஏ வெளிவத்த கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த தங்கெதர கிராமத்தின் அ. நி. கா 2969 இன் துண்டு இலக்கம் 02 மற்றும் 03 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 0.0049, 0.0026 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. முறுக்குவாத்துர லலித் வசந்த மெண்டிஸ் என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு**:

துண்டு இலக்கம் 02 இன் எல்லைகள் வருமாறு:
வடக்கு : துண்டு இலக்கம் 01 மற்றும் டிக்சன் வீதி;
கிழக்கு : டிக்சன் வீதி மற்றும் துண்டு இலக்கம் 03;
தெற்கு : துண்டு இலக்கம் 03 மற்றும் அசோக்கா ஹேவா உரிமை கோருகின்ற இலக்கம் 65, கடை வீதி காணி;
மேற்கு : அசோக்கா ஹேவா உரிமை கோருகின்ற இலக்கம் 65, கடை வீதி காணி மற்றும் துண்டு இலக்கம் 01.

துண்டு இலக்கம் 03 இன் எல்லைகள் வருமாறு:
வடக்கு : துண்டு இலக்கம் 02 மற்றும் டிக்சன் வீதி;
கிழக்கு : டிக்சன் வீதி மற்றும் ஜி. சமரரத்ன உரிமை கோருகின்ற இலக்கம் 07 டிச்சன் வீதி;
தெற்கு : ஜீ. சமரரத்ன உரிமை கோருகின்ற இலக்கம் 07 டிக்சன் வீதி காணி மற்றும் அசோக்கா ஹேவா உரிமை கோருகின்ற இலக்கம் 65, கடை வீதி காணி;
மேற்கு : அசோக்கா ஹேவா உரிமை கோருகின்ற இலக்கம் 65, கடை வீதி காணி மற்றும் துண்டு இலக்கம் 02.

கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.02.10 ஆம் திகதியிலிருந்து 2053.02.09 வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் அடிப்படையில் குறித்த வருடத்தில் இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப்பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப்பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.02.10 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் குத்தவை வழங்கிய நோக்கத்தை நிறைவு செய்யும் நோக்கத்துக்காக துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயாமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 06 வார காலப் பகுதிகுள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

துஷித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒற்றோபர் 05.

10 - 150

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75268. மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/26/ KG/L/244.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொணராகலை மாவட்டம், கதர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 146D, கரவிலே கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த கெஸ்டுபான கிராமத்தின் அதிகாரம் பெற்ற நிலஅளவையியலாளர் திரு. கே. டப். எஸ் விக்னராஜா என்பவர் மூலம் வரையப்பட்ட நிலவரைபட இல. 0627 இன் துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர், 20 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திருமதி. தினேஷனி ஹெட்டியாரச்சி என்பவர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:**

வடக்கு : பீ. ஜயவர்த்தன என்பவரின் காணி;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : வயற் காணி;
மேற்கு : குளக்கட்டு ஒதுக்கம் மற்றும் பாதை.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம் .-** முப்பது (30) வருடங்கள் (2024.06.28 இலிருந்து 2054.06.27 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்.-** 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4 % ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்.-** தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2024.06.28 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

துஸித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஒகத்து 26.

10 - 168

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.